Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 17 பெப்ரவரி, 2022

**மைலோ தனது '*Milo* Moments' பிரச்சாரத்தின் மூலம் சிறுவர்கள் சுறுசுறுப்பாக இருக்க ஊக்குவிக்கிறது**
*விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்களுடன் 12,000 சிறுவர்களுக்கு பரிசுகளை வழங்கியுள்ளது*

நெஸ்லே நிறுவனத்தின் மைலோ சமீபத்தில் முன்னெடுத்திருந்த '*Milo* Moments' பிரச்சாரத்தின் மூலமாக 2022 ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கும் வகையில் மூன்று மாதங்களுக்கு வாரந்தோறும் 1000 வெற்றியாளர்களுக்கு வெகுமதி அளிக்கவுள்ளது. மடிகணினிகள், டெப் சாதனங்கள், ரீலோடுகள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், ஸ்கேட்போர்டுகள், கூடைப்பந்துகள், உதைப்பந்துகள், ஸ்கிப்பிங் ரோப்ஸ் (துள்ளல் கயிறு), சப்பாத்துகள் மற்றும் டிராம்போலின்கள் போன்ற விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்கள் இதில் அடங்கியுள்ளன. நெஸ்லே மைலோ தனது வாடிக்கையாளர்களை அவர்கள் வாழ்க்கையில் மேலும் முன்னேற உதவும் ஒரு வர்த்தகநாமமாக இருப்பதால், தொற்றுநோயின் சவால்களுக்கு மத்தியில் சிறுவர்கள் சுறுசுறுப்பாக இருக்கவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை முன்னெடுக்கவும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் இந்தப் பிரச்சாரத்தை நடத்துகிறது.

"தொற்றுநோய் பரவ ஆரம்பித்திருந்த சமயத்தில், வெளிப்புற விளையாட்டுகள் மற்றும் அணியாக முன்னெடுக்கும் செயல்பாடுகள் தடைப்பட்டன. ஆகையால் சிறுவர்கள் தமது வீடுகளுக்குள் முடங்க வேண்டி ஏற்பட்டது. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு விளையாட்டு மற்றும் உடல்ரீதியான செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை எப்போதும் நம்பும் ஒரு வர்த்தகநாமமாக, இந்த சவாலான காலத்திலும் சுறுசுறுப்பாக இருக்க ஏராளமான செயல்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பதை சிறுவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். எனவே, நாடு முழுவதிலுமுள்ள 12,000 சிறுவர்களுக்கு விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்களை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மூலமாக அவர்களை உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருக்க ஊக்குவிப்பதுடன், அவர்களின் கல்வித் தேவைகளுக்கும் ஆதரவளிக்க முடியும்," என்று நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்பு வகை சந்தைப்படுத்தல் முகாமையாளரான மொஹமட் அலி அவர்கள் கூறினார்.

2022 ஜனவரி 27 அன்று, மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சுடன் இணைந்து '*Milo* Moments' பிரச்சாரத்தின் வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சரான கௌரவ எச்.எம் பியல் நிசாந்த த சில்வா இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்ததுடன், இது தொடர்பில் கூறுகையில், "ஆரோக்கியமான தலைமுறையை வளர்ப்பதற்கு உதவுவதற்காக நெஸ்லே மைலோ போன்ற வர்த்தகநாமத்துடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இம்முயற்சியின் மூலம் வழங்கப்படும் உபகரணங்கள், சிறுவர்களை உடல் ரீதியாக சுறுசுறுப்பாகச் செயல்பட ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், அவர்களின் விளையாட்டுத் திறன் மற்றும் திறமைகளை வளர்க்கவும் உதவும்," என்று குறிப்பிட்டார்.

தங்களுடைய Milo Moment தொடர்பான புகைப்படத்தை தமது பெயர், தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றுடன் MILO Champs 0777680077 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு வைபர் அல்லது வாட்ஸ்அப் தளத்தினூடான அல்லது @MiloSriLanka முகநூல் பக்கத்திற்கு நேரடியாக அனுப்பி வைப்பதன் மூலமாக இப்பிரச்சாரத்திற்குத் தகைமை பெறுவார்கள். மடிகணினிகள், டெப் சாதனங்கள், ரீலோடுகள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், ஸ்கேட்போர்டுகள், கூடைப்பந்துகள், உதைப்பந்துகள், ஸ்கிப்பிங் கயிறுகள், காலணிகள் அல்லது டிராம்போலைன்கள் ஆகியவற்றை வெல்வதற்காக, போட்டியின் விதிமுறைகளின்படி, ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்ட குலுக்கல் சீட்டிழுப்பின் மூலம் 1,000 வெற்றியாளர்கள் எழுந்தமானமான அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் தகவல்கள் விபரங்களை @MiloSriLanka முகநூல் பக்கம் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

நல்லுணவு, நல்வாழ்வு நிறுவனமான நெஸ்லே, இலங்கையில் 115 வருடங்களுக்கும் மேலாக நிலைபெற்றுள்ளது. நெஸ்லே மைலோ விட்டமின்கள் மற்றும் கனியுப்புக்களின் செழுமை நிரம்பியதுடன், பால், மோல்ட் சாறு மற்றும் சிறந்த கொக்கோ பீன்ஸ் ஆகியவற்றின் நலச்செழுமையுடன் தயாரிக்கப்படுகிறது. இது நெஸ்லே நிறுவனத்தின் குருநாகலில் உள்ள அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகிறது. அத்துடன், நெஸ்லே உலகம் முழுவதும் புகழ்பெற்றுள்ள அதன் உயர்தர தரத்தை கட்டிக்காத்து வருகின்றது.